

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி சுகாதார மாவட்டம், ஆலங்குடி வட்டம், ஆலங்குடி அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் "நலம் காக்கும் ஸ்டாலின்" உயர்மருத்துவ சேவை முகாமினை, பிற்படுத்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 25.10.2025 அன்று துவக்கி வைத்து, கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களையும் வழங்கினார். உடன், ஆலங்குடி பேரூராட்சித் தலைவர் திருமதி.மு.ராசி முருகானந்தம் அறந்தாங்கி மாவட்ட சுகாதார அலுவலர் மரு.விஜயகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் இரா.செந்தில்குமார் அவர்களின் தந்தையாரும், கழக முன்னோடி, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சிட்டு.பெ.ராமலிங்கம் அவர்களின் சொந்த ஊரான இடையக்குறிச்சியில் அவரது இல்லதிற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேரில் சென்று உடம்நலம் குறித்து விசாரித்தார். உடன் ஆண்டிமடம் தெற்கு ஒன்றிய கழகப் பொறுப்பாளர் ஆர்.கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பலரும் உடனிருந்தனர்.



பெரம்பலூரில் நடைபெற்ற, கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி. யின் சகோதரி மகன் சென்னை உயர்நீதிமன்ற அரசு கூடுதல் வழக்கறிஞர் முனைவர் டி. சீனிவாசன் இல்லப் புதுமனை புகு விழாவில் கலந்து கொண்டு வாழ்த்திய போது, போக்குவரத்துத் துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத், ஒன்றிய கழக செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம். ராஜ்குமார், செ.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், அழகு. நீலமேகம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தலைமை! தென்காசி மாவட்டத்திற்கு வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஆலங்குளத்தில் சிறப்பான வரவேற்பு!

### இரா.ஆவுடையப்பன் – ஈ.ராஜா எம்.எல்.ஏ. முன்னிலை! மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன் அறிக்கை!

*தென்காசி.அக்.29-*

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் இன்று (29-10-2025 - புதன் கிழமை) தென்காசி மாவட்டத்திற்கு வருகை தர உள்ளதை முன்னிட்டு ஆலங்குளத்தில் சிறப்பான வரவேற்பு கொடுக்கப்படுகிறது. இந்நிகழ்வு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் தலைமையில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது என தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

திராவிட மாடல் முதலமைச்சர். அவர்கள் வருகிற 29-10-2025 அன்று தென்காசி மாவட்டத்திற்கு வருகை தந்து பல்வேறு அரசு துறைகளின் சார்பில் நடைபெற உள்ள அரசு



நிகழ்வில் பங்கேற்று பல்லாயிரக் கணக்கான பயனாளிகளுக்கு பல் வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் 29-10-2025 அன்று காலை சென்னையிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டு 10:30 மணிக்கு தூத்துக்குடியில் விமான நிலையம் வருகை தருகிறார்கள். அங்கிருந்து சாலை மார்க்கமாக தென்காசி வருகிறார்கள். வரும் வழியில் அன்று காலை 11:30 மணிக்கு முதலமைச்சர் அவர்களுக்கு நெல்லை மேற்கு மாவட்டம் ஆலங்குளத்தில் சிறப்பான வரவேற்பு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ் ஆர்.இராமச்சந்திரன் தலைமையில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலையில் உற்சாகமான வரவேற்பு கொடுக்கப்படுகிறது. இதில் கழக நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

பின்னர் மதியம் குற்றாலம் சுற்றுலா மாளிகையில் முதலமைச்சர் அவர்கள் தங்கி விட்டு மாலை 4 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு அரசு நிகழ்ச்சிகள் நடைபெறும் இலத்தூர் விலக்கு ஆய்க்குடி சாலையில் தென்காசி மங்கம்மா சாலை சந்திக்கும் இடத்தில் பெட்ரோல் பங்க் அருகில் அமைந்துள்ள ஜாஸ் ஸ்மார்ட் சிட்டி மைதானத்திற்கு வருகை தருகிறார்கள்.

அதனைத் தொடர்ந்து திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் பல்லாயிரக்கணக்கான பயனாளிகளுக்கு பல்வேறு நலத் திட்டங்களை உதவிகளை வழங்கி சிறப்புரை யாற்றுகிறார்கள்.

நிகழ்ச்சி முடிந்த பிறகு முதலமைச்சர் அவர்கள் சாலை மார்க்கமாக ராஜபாளையம் வழியாக மதுரை சென்று இரவில் அங்கு தங்குகிறார்கள்.

மறுநாள் 30-10-2025 அன்று முதலமைச்சர் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் நடைபெறும் தேவர் ஜெயந்தி விழாவில் கலந்து கொண்டு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்து கிறார்கள்.

தென்காசி மாவட்டத்திற்கு வருகை தரும் திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட வேண்டும்.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வருகைக்கான சிறப்பான ஏற்பாடுகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் தென்காசி மாவட்டப் பொறுப்பு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன், நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வேஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் செய்துள்ளனர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### சிவகங்கை மாவட்டக் கழகத்தின் சார்பில் திருப்புவனத்தில்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

*சிவகங்கை, அக். 29-*

கழகத் தலைவர், முதல்வர் தளபதி அவர்கள் நாளை பசும்பொன் செல்லும் வழியில் சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் திருப்புவனத்தில் சிறப்பான வரவேற்பு தரப்பட உள்ளதாக அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

கழகத் தலைவரும் திராவிட மாடல் ஆட்சியின் நாயகருமான முதல் வர் தளபதி அவர்கள் நாளை (30ம் தேதி - வியாழக்கிழமை) காலை பசும்பொன்னில் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் குருபூஜை விழாவில் கலந்து கொண்டு மரியாதை செலுத்துகிறார்.

இதற்காக மதுரையிலிருந்து கார் மூலம் காலை பசும்பொன் கிராமத்திற்கு



செல்கிறார். முதல்வர் பசும்பொன்னிற்கு செல்லும் வழியில் சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் மாவட்ட எல்கையான திருப்புவனம் மின்வாரிய அலுவலகம் முன்பாக காலை 8.00மணி அளவில் மாவட்ட செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன்.

தலைமையில் முதல்வருக்கு சிறப்பான எழுச்சியான வரவேற்பு தரப்பட உள்ளது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்புஅணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### மல்லூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளர்

# என்.சுரேந்திரன் - எஸ்.நித்யா இல்ல மணவிழா!

### கழகத்தினர் வாழ்த்து!

*சேலம், அக். 29 -*

சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க மல்லூர் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் என். சுரேந்திரன் - எஸ். நித்யா மகன். எஸ்.அபிநயனுக்கும். நாமக்கல்.

எம். பாலசுப்பிரமணியன். டி. பரிமளா. ஆகியோரின்

மகள். பி. யாழினிக்கும். நாளை (30.10.2025 - வியாழக் கிழமை) மாலை 6 மணிக்கு இராசிபுரம் சுஜிதா திருமண மண்டபத்தில் திருமண வரவேற்பு நடைபெற உள்ளது.

இம்மணவிழாவில் சேலம் கிழக்கு மாவட்ட ஒன்றிய, பேரூர்க் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



கழக இளைஞரணி அறக்கட்டளையின் சார்பில் திருவாரூர் மாவட்டம் எண்கண் பகுதியைச் சேர்ந்த இளையராஜாவி ன் கோரிக்கையை ஏற்று துணை முதல்வர், இளைஞரணி செயாலாளர் உதயாநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கிய ரூ 25000க்கான காசோலையை, மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம். எல். ஏ.பயனாளிக்கு வழங்கினார். உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பணங்குடி. ஏ. எஸ். குமார் , நகர செயலாளர் வாரை . பிரகாஷ் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்ட மகளிர் அணி சார்பில் ஸ்ரீ மருதமலை முருகன் ஆயில் ஏஜென்சிஸ் – ஏ.ஆர். கையுந்து பந்து குழு இணைந்து நடத்தும் பெண்கள் மற்றும் ஆண்களுக்கான மாநில அளவிலான கையுந்து பந்து போட்டி மாநகர் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் வ.அன்னம்மாள் ராஜா ஏற்பாட்டில் நடைபெற்றது. இப்போட்டியை கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன் துவக்கி வைத்தார். இதில் கழக மாணவர் அணி செயலாளர் இரா.ராஜீவ் காந்தி, கழக தகவல் தொழில்நுட்ப அணி இணை செயலாளர், மருத்துவர் ஆர்.மகேந்திரன், கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் மீனா ஜெயக்குமார், பகுதி கழக பொறுப்பாளர் வி.ஐ.பதுருதீன், 83 வது வார்டு மாமன்ற உறுப்பினர் சுமா விஜயகுமார், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் கனிமொழி, நா.பாபு, சிவப்பிரகாஷ், வழக்கறிஞர் குமணன், தீபா, பொன் சஞ்சீவிநாதன், சிவகாமி பாலசுந்தரம், புவனேஸ்வரி, சுரேந்தர், சீனிவாசன், 83 வது வார்டு செயலாளர் விஜயகுமார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கழக அரசின் நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பொன்னான திட்டமான உங்களுடன் ஸ்டாலின் முகாம் கோவை மாநகர் மாவட்டம், தெற்கு சட்டமன்றத் தொகுதி, கோவை மாநகராட்சி மத்திய மண்டலம், வார்டு எண் 70, 83 க்குட்பட்ட சிரியன் சர்ச் ரோட்டில் உள்ள IMA ஹாலில் நடைபெற்றது. இம்முகாமை கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன் துவக்கி வைத்து பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். இதில் கழக மாணவரணி செயலாளர், வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி, மத்திய மண்டலத் தலைவர் மீனா லோகு, மாமன்ற உறுப்பினர்கள் சுமா விஜயகுமார், சர்மீளா, பகுதி கழக பொறுப்பாளர்கள் ம.ந.க.கண்ணன், வி.ஐ.பதுருதீன், வட்ட கழக செயலாளர்கள் சுரேஷ் நாராயணன், விஜயகுமார் தலைமை கழக பேச்சாளர் சம்பத், பாலாஜி, அய்யாவு, கணேஷ், சுஜித், ஆபிரகாம், குமார், மோகன், அபினேஷ், அமீன், மகாலட்சுமி, கவிதா, பத்மா, ரூபா, நாகமணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.